தனிச்சுற்றுக்கு மட்டும்

அருள் 1 | தூது 7 | அக்டோபர் 2017 | ₹ 5

அருள் தூது

இது திருச்சபையின் குரல்

இது ஒரு தக்கலை மறைமாவட்ட வெளியீடு

### ஏழைகளும் அடித்தட்டு மக்களும் ஏற்றம் பெற

# உயிர் தியாகம் செய்த மாபெரும் அருட்சகோதரி

## முத்திப்பேறு பெற்ற இராணி மரியா




இந்தியாவில், 22 ஆண்டுகளுக்கு முன்னர் கொடூரமாய் குத்திக் கொலைசெய்யப்பட்ட இறையடியார் அருள்சகோதரி, ராணி மேரி வட்டாலில் அவர்கள், நவம்பர் 04, 2017, சனிக்கிழமை காலையில் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

மத்திய பிரதேச மாநிலத்தின், இன்டோர் நகரிலுள்ள புனித பவுல் பள்ளி வளாகத்தில், புனிதர்நிலை திருப்பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள், தலைமையேற்று திருப்பலி நிறைவேற்றி, இறையடியார் ராணி மேரி அவர்களை, முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

கர்தினால்கள் ஜார்ஜ் ஆலஞ்சேரி, ஆசுவால்டு கிரேசியஸ், பசிலியோஸ் கிளீமிஸ், திருப்பீடத் தூதர் பேராயர் ஜாம்பத்திஸ்தா திகுவாத்ரோ, இன்டோர் பேராயர் சாக்கோ தொட்டுமரிக்கல் ஆகியோர் நிறைவேற்றிய கூட்டுத் திருப்பலியில், கர்தினால் ஆலஞ் சேரி அவர்கள், இராணி மேரி அவர்களின் வாழ்க்கை வரலாறை ஆங்கிலத்தில் வாசித்தார்.

உதயநகர் ஆலயத்தில் முத்திப்பேறு பெற்ற இராணி மேரி அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில், பேராயர் ஜாம்பத்திஸ்தா திகுவாத்ரோ அவர்கள் ஞாயிறன்று திருப்பலி நிறைவேற்றினார்.

மேலும், எர்ணாகுளம் புனித மரியா பசிலிக்காவில் நவம்பர் 11ம் தேதி, முத்திப்பேறு பெற்ற ராணி மேரி அவர்களின் நினைவாக திருப்பலி நிறைவேற்றப்படும் என்றும், அவரின் புனிதப் பொருள்கள், புள்ளுவழி ஊர் வழியாக கேரளாவின் பல்வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் அருள்சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருள்சகோதரி, இறையடியார் ராணி மேரி அவர்கள், 1995ம் ஆண்டு பிப்ரவரி 25ம் தேதி, பேருந்தில் இன்டோர் நகருக்குப் பயணம் செய்துகொண்டிருந்தபோது, 41 வயது மதிக்கத்தக்க சமந்தார் சிங் என்பவரால், 54 முறைகள் கத்தியால் குத்தப்பட்டு இறந்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தில், இன்டோர் மறைமாவட்டத்தில், ஏழைகள் மத்தியில், முத்திப்பேறு பெற்ற ராணி மேரி அவர்கள் ஆற்றிவந்த பணிகளால் எரிச்சலடைந்த சில பண்ணையார்களின் தூண்டுதலால், இவர் கொலைசெய்யப்பட்டார்.

இச்சகோதரியின் குடும்பத்தினர், கொலையாளியான சமந்தார் சிங் அவர்களை மன்னித்து, அவரை அடிக்கடி சிறையில் சென்று சந்தித்துப் பேசியதன் பயனாக, தற்போது, சமந்தார் சிங் மனம் மாறி, முத்திப்பேறு பெற்ற ராணி மேரி அவர்களின் பக்தராக மாறியுள்ளார்.

1954ம் ஆண்டு சனவரி 29ம் தேதி கேரளாவின் கொச்சி நகருக்கு அருகிலுள்ள புல்லுவழி என்ற ஊரில் பிறந்த அருள்சகோதரி ராணி மேரி அவர்கள், கிடங்ஙூரில், பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையில், 1972ம் ஆண்டில் சேர்ந்து, 1974ம் ஆண்டில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார். 1975ம் ஆண்டில் வட இந்தியாவில் பிஜ்னோர் இல் தனது மறைப்பணியைத் தொடங்கிய இச்சகோதரி, 1992ம் ஆண்டில், உதய் நகரில் பணியாற்றச் சென்றார்.

சமூக நீதிக்காகக் குரல்கொடுத்த முத்திப்பேறு பெற்ற ராணி மேரி, 1995ம் ஆண்டு பிப்ரவரி 25ம் தேதி, தனது 54வது வயதில் கொல்லப்பட்டார்,

### தக்கலை மறைமாவட்டத்தின் எல்லை விரிவாக்கம்

தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி சீரோ மலபார் வழிபாட்டு முறைக்குட்பட்ட, கத்தோலிக்க மறைமாவட்டமாக திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள் அறிவிக்கப்பட்ட, தக்கலை மறைமாவட்டத்தின் எல்லை கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தைக் கொண்டதாக இருந்தது. தற்போது அதன் எல்லையை விரிவாக்கும் அதிகாரபூர்வமான ஆணையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அக்டோபர் 09, 2017 அன்று வெளியிட்டார். இவ்வாணைப்படி, தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையானது, கன்னியாகுமரி, மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய தமிழக மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.

# கந்தமால் கிறிஸ்தவர்களுக்கு மேலும் இழப்பீட்டுத் தொகை வழங்க கோரிக்கை



இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் கந்தமால் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை மேலும் வழங்கப்பட வேண்டும் என்று கட்டக்-புவனேஸ்வர் பேராயர் ஜான் பார்வா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பாதிக்கப்பட்ட கந்தமால் கிறிஸ்தவர்கள் சார்பாக, உச்ச நீதிமன்றம், கடந்த ஆண்டில் மாநில அரசுக்கு விடுத்த கட்டளை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் மனு ஒன்றை, பேராயர் ஜான் பார்வா அவர்கள் தலைமையிலான கிறிஸ்தவத் தலைவர்கள் குழு ஒன்று, மாவட்ட ஆட்சியாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

இதற்குரிய நிதி, கந்தமால் மாவட்டத்தில் ஏற்கனவே இருக்கின்றபோதிலும், இதுவரை கிறிஸ்தவர்களுக்கு எதுவும் வழங்கப்படவில்லை என்று, ஆசியச் செய்தியிடம் கூறினார், பேராயர் ஜான் பார்வா.

இன்னும் சிறையிலுள்ள ஏழு அப்பாவி கிறிஸ்தவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று செபிக்குமாறும் பேராயர் ஜான் பார்வா விசுவாசிகளைக் கேட்டுக்கொண்டார். கந்தமால் மாவட்டத்தில் கிறிஸ்தவர்க்கெதிராக இடம்பெற்ற வன்முறையில், பலியான ஒவ்வொருவருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய், கடுமையாய் காயம்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா முப்பதாயிரம் ரூபாய், இலேசாக காயமடைந்த ஒவ்வொருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் என்று, மேலும் இழப்பீட்டு தொகை வழங்கப்பட வேண்டுமென்று, 2016ம் ஆண்டு ஆகஸ்டில், உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

## காஷ்மீர் பகுதியில் அமைதி நிலவ கத்தோலிக்க கோவில் மணி

காஷ்மீர் பகுதியில் அமைதி நிலவவேண்டுமென்ற நோக்கத்துடன், இந்து, சீக்கிய, இஸ்லாமிய, மாற்றம் கிறிஸ்தவ தலைவர்கள், ஸ்ரீநகரில் அமைந்துள்ள ஒரு கத்தோலிக்க கோவிலின் மணியை இணைந்து ஒலித்தனர்.

120 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்குடும்ப கோவிலின் மணி பழுதடைந்ததால், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒலிக்காமல் இருந்துவந்த வேளை, அண்மையில், அது மீண்டும் சீரமைக்கப்பட்டு, 29.10.2017 ஞாயிறு அன்று மீண்டும் ஒலிக்கப்பட்டது.

மக்களை செபிப்பதற்கு அழைக்கும் கோவில் மணி, அமைதிக்கும் அழைப்பு விடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில், பல்சமயத் தலைவர்கள் இணைந்து இந்தக் கோவில் மணியை ஒலித்தனர் என்று, திருக்குடும்பக் கோவிலின் அருள்பணியாளர் இராய் மாத்யூஸ் அவர்கள் ஹிசிகி செய்தியிடம் கூறினார்.

# மறைவு

## பாண்டிச்சேரி முன்னாள் பேராயர் மைக்கிள் அகுஸ்தின்

\



பாண்டிச்சேரி – கடலூர் உயர்மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் மைக்கிள் அகுஸ்தின் அவர்கள், நவம்பர் 04, சனிக்கிழமையன்று இயற்கை எய்தினார்.

1933ம் ஆண்டில் கோவிலானூரில் பிறந்த பேராயர் மைக்கிள் அகுஸ்தின் அவர்கள், 1961ம் ஆண்டு, பாண்டிச்சேரி-கடலூர் உயர்மறைமாவட்டத்திற்காக அருள்பணியாளராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். பாரிஸ் கத்தோலிக்க நிறுவனத்தில் மெய்யியலில் முதுகலைப்பட்டம் பெற்ற இவர், 1965ம் ஆண்டில், பெங்களூரு புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் பேராசிரியராக இணைந்தார். பின் அக்கல்லூரியின் அதிபராக, 1974ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். 1978ம் ஆண்டில், சென்னை-மயிலாப்பூர் உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக, தனது 45வது வயதில் நியமிக்கப்பட்டு பணியாற்றிய இவர், 1981ம் ஆண்டு ஜூன் 19ம் தேதி வேலூர் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார்.

அதன்பின், 1992ம் ஆண்டு பிப்ரவரி 18ம் நாள், பாண்டிச்சேரி-கடலூர் உயர்மறைமாவட்டத்தின் பேராயராக நியமிக்கப்பட்டு, 2004ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி பணி ஓய்வு பெற்றார்.

இவர் வேலூர் ஆயராக, பத்து ஆண்டுகள் 11 மாதங்கள் பணியாற்றிய காலத்தில், ஏறத்தாழ நூறு ஆலயங்கள் மற்றும் சிற்றாலயங்களைக் கட்டியுள்ளார். ஏழு புதிய பங்குகளையும், மூன்று உயர்நிலைப்பள்ளிகளையும் உருவாக்கியுள்ளார். ஐந்து ஆரம்பப் பள்ளிகளை, நடுத்தரப் பள்ளிகளாக உயர்த்தியிருக்கிறார். மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த, மாணவர்களுக்கு கோடை விடுமுறை பள்ளிகளையும் நடத்தியிருக்கிறார்.

மறைந்த பேராயர் மைக்கிள் அகுஸ்தின் அவர்களின் உடல், நவம்பர் 06, திங்கள் காலை பத்து மணிக்கு பாண்டிச்சேரி அமலமரி பேராலயத்தில் நடைபெறும் திருப்பலிக்குப்பின், நல்லடக்கம் செய்யப்பட்டது.

# புதிய மறைமாவட்டங்கள்

## சீரோ-மலபார் வழிபாட்டுமுறை திருச்சபை

### ஷம்ஷாபாத், ஓசூர்



பேராருட். செபாஸ்டியன் போழோலிப்றம்பில்



மார் ரபேல் தட்டில்

இந்தியாவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, ஷம்ஷாபாத் (Shamshabad) மற்றும், ஓசூர் சீரோ-சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் புதிய மறைமாவட்டங்களுக்கும், அவற்றிற்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய ஆயர்களுக்கும், இச்செவ்வாயன்று ஒப்புதல் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

தெலுங்கானா மாநிலத்திலுள்ள ஷம்ஷாபாத் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, இந்நாள்வரை திருச்சூர் துணை ஆயராகப் பணியாற்றிவந்த, ஆயர் ரபேல் தட்டில் (Raphael Thattil) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வடக்கிலுள்ள ஓசூர் சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் புதிய மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி செபாஸ்டின் போழோலிப்பறம்பில் (Sebastian (Jobby) Pozholiparampil) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை-யிலுள்ள ஏறத்தாழ ஐம்பதாயிரம் மற்றும், செங்கல்பட்டு, தர்மபுரி, வேலூர், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளிலுள்ள ஏறத்தாழ பதினைந்தாயிரம் சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் விசுவாசிகளை, இப்புதிய ஓசூர் மறைமாவட்டம் கொண்டிருக்கின்றது.

# கண்தானம்

## இந்திய அருள்பணியாளரின் முயற்சி

நான்கு ஆண்டுகளுக்கு முன், கிளேரி-சியன் சபை அருள்பணியாளர் ஜார்ஜ் கண்ணன்தானம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கண் தான இயக்கம், தற்போது ஐந்து நாடுகளில், 250 நகரங்களில் பரவியுள்ளது. 2013ம் ஆண்டில் ஆரம்பித்த கண் தான இயக்கம், கண் விழிவெண்படலம் தானம் செய்யப்படுவதை ஊக்குவித்து வருகிறது. இந்த கண் தான இயக்கம், கடந்த நான்கு ஆண்டுகளில், ஐந்து நாடுகளில், நூற்றுக்கணக்கான தன்னார்வ நிறுவனங்கள், மறைமாவட்டங்கள் மற்றும் துறவற நிறுவனங்களில் பரவியுள்ளது.

# மனித உரிமை

## கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரிப்பு

2015ம் ஆண்டுக்கும், 2017ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான், கிறிஸ்தவர்கள் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்று, Aid to the Church in Need உலகளாவிய கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு கூறியுள்ளது.

நசுக்கப்பட்ட மற்றும் மறக்கப்பட்ட என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை பற்றிக் கூறிய Aid to the Church in Need அமைப்பின் Marta Petrosillo அவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மிகவும் மோசமடைந்து, பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது என்று தெரிவித்தார்.

மத்திய கிழக்கில், ஐஎஸ்ஐஎஸ் இஸ்லாம் அரசின் நடவடிக்கைகளால், சிரியாவிலுள்ள கிறிஸ்தவர்களில் 75 விழுக்காட்டினரும், ஈராக்கிலுள்ள கிறிஸ்தவர்களில் பாதிப் பேரும் நாடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் Petrosillo அவர்கள் தெரிவித்தார்.

> கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மிகவும் மோசமடைந்து, பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது

நைஜீரியாவில் போக்கோ ஹராம் இஸ்லாம் தீவிரவாத அமைப்பு, கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடத்தும் அட்டூழியங்களால், ஏறத்தாழ இருபது இலட்சம் பேர் புலம்பெயர்ந்துள்ளனர், 200 ஆலயங்கள் வரை சேதப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் 15 ஆயிரம் சிறார் பெற்றோரை இழந்துள்ளனர்.

சீனாவில், திருஅவை அதிகாரிகள், அரசு அதிகாரிகளால் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு வருகின்றனர், எரிட்ரியா, வட கொரியா போன்ற சர்வாதிகார நாடுகளிலும், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் கிறிஸ்தவர்கள் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்று, அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நிவாரண உதவி

### ரொஹிங்கியா புலம்பெயர்ந்தவர்களுக்கு பங்களாதேஷ் காரித்தாஸ்

மியான்மாரில் ரொஹிங்கியா இன மக்களுக்கு எதிராக இடம்பெறும் அடக்குமுறைகளுக்கு அஞ்சி, பங்களாதேஷ் வந்துள்ள ஏறத்தாழ எழுபதாயிரம் பேருக்கு, பங்களாதேஷ் காரித்தாஸ் நிறுவனம், நிவாரண உதவிகளை ஆற்றி வருகின்றது.

இரண்டு மாத, ஆரம்பகால நிவாரண உதவிகளைச் செய்வதற்கு, பங்களாதேஷ் அரசு, காரித்தாஸ் நிறுவனத்திற்கு அனுமதியளித்திருக்கின்றது என்று, அந்நிறுவனத்தின் James Gomes அவர்கள் ம்




கூறினார்.

Cox's Bazar மாவட்டத்தில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள ரொஹிங்கியா இன மக்களுக்கு, காரித்தாஸ் நிறுவனம் உதவி வருகிறது.

பங்களாதேஷ் நாட்டில், ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ரொஹிங்கியா இன மக்கள் அடைக்கலம் தேடி–யிருப்பதால், இந்நாடு கடும் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்கின்றது என்றும் செய்திகள் கூறுகின்றன.

## ஊட்டச்சத்துப் பற்றாக்குறைவால் இறக்கும் சிறார்



ஊட்டச்சத்துப் பற்றாக்குறைவால், உலகில் இறக்கும் சிறாரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், உலகில் ஐந்து வயதுக்குட்டப்பட்ட முப்பது இலட்சம் சிறார், ஒவ்வோர் ஆண்டும் இறக்கின்றனர் என்றும், Save the Children அமைப்பின் புதிய அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறை, வளரும் நாடுகளில் மூன்றில் ஒரு சிறாரைப் பாதித்துள்ளது என்றும், இப்பாதிப்பால், ஒவ்வொரு மணிக்கும், 300 சிறார் வீதம் இறக்கின்றனர் என்றும், Save the Children அமைப்பு கூறியது.

அமெரிக்காவில், ஒரு கோடியே அறுபது இலட்சத்துக்கு மேற்பட்ட சிறாருக்கு, அடுத்தவேளை உணவு எப்போது கிடைக்கும் என்பது நிச்சயமற்று உள்ளது எனவும், ஊட்டச்சத்துப் பற்றாக்குறைக்கான காரணங்களில், நோய், வறுமை, மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறைவும் உள்ளடங்கும் எனவும், அவ்வறிக்கை கூறுகின்றது.

உலகில், தடுத்து நிறுத்தக்கூடிய மற்றும் சிகிச்சை வழங்கக்கூடிய நோய்களால், ஏறத்தாழ 59 இலட்சம் சிறார் ஒவ்வோர் ஆண்டும் இறக்கின்றனர். இவர்களில் பத்து இலட்சம் குழந்தைகள், பிறந்த நாளன்றே இறக்கின்றன.

# மனித உரிமை

## மனிதத்திற்கெதிரான குற்றங்கள்

மியான்மாரில் பல்லாயிரக்கணக்கான ரோஹிங்கிய இன மக்கள், நாட்டைவிட்டு வெளியேறிவரும்வேளை, அந்நாட்டின் பாதுகாப்புப் படைகள் மனித சமுதாயத்திற்கெதிராக குற்றங்கள் செய்து வருகின்றன என்று, Amnesty International என்ற, பன்னாட்டு மனித உரிமைகள் கழகம், இப்புதனன்று குறை கூறியது.

மியான்மாரில் பல்லாயிரக்கணக்கான ரோஹிங்கிய இன மக்கள், நாட்டைவிட்டு வெளியேறிவரும்வேளை, அந்நாட்டின் பாதுகாப்புப் படைகள் மனித சமுதாயத்திற்கெதிராக குற்றங்கள் செய்து வருகின்றன

ரோஹிங்கிய இன மக்களில் 120 பேர் உட்பட, தனக்கு கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் அறிக்கை வெளியிடுவதாகக் கூறியுள்ள இக்கழகம், ரோஹிங்கிய மக்களுக்கு எதிராக, திட்டமிட்ட, மற்றும் இரக்கமற்ற முறையில் இராணுவத்தின் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ளது.

முப்பது மருத்துவர்கள், நிவாரணப் பணியாளர்கள், செய்தியாளர்கள், பங்களாதேஷ் அதிகாரிகள் ஆகியோரிடம் பேட்டி கண்டுள்ள Amnesty International, ரோஹிங்கிய இன மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் பற்றி, "My World Is Finished" என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ராக்கினே மாநிலத்தில், கடந்த ஆகஸ்ட் 25ம் தேதி, ரோஹிங்கிய புரட்சியாளர்கள், இராணுவ முகாம்கள் மீது, முப்பது இடங்களில் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இராணுவம் பதிலடி தாக்குதல்களை நடத்தி வருகிறது என்று செய்திகள் கூறுகின்றன.

ராக்கினே மாநிலத்தின் வட பகுதியில், குறைந்தது 288 கிராமங்கள், தீயினால் முழுவதுமாக அல்லது பாதியாக அழிக்கப்பட்டுள்ளன என்று, Human Rights Watch நிறுவனத்தின் அறிக்கை கூறுகின்றது.

## சண்டை நிறுத்த அரசியல் தீர்வு அவசியம்

உலகில் தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத வகையில், ஏராளமான மக்கள் புலம்பெயர்ந்துவரும்வேளை, உலகில் இடம்பெறும் சண்டைகள் நிறுத்தப்படுவதற்கு, அரசியல்முறைப்படி தீர்வுகள் காணப்படுமாறு, ஐ.நா.வின் புலம்பெயர்வோர் நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

உலகின் பல பகுதிகளில் தங்களின் அனைத்து உடைமைகளையும் விட்டுவிட்டு புலம்பெயரும் இலட்சக்கணக்கான மக்களின் பாதுகாப்புக்கு, அரசியல் மட்டத்தில் தீர்வுகள் அவசியம் என்று, ஐ.நா. பாதுகாப்பு அவையில் கூறியுள்ளார், ஐ.நா.வின் புலம்பெயர்வோர் நிறுவனத்தின் தலைவர், பிலிப்போ கிராந்தி.

தற்போது உலக அளவில் புலம்பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 6 கோடியே 60 இலட்சத்தை எட்டியுள்ளது, இவ்வெண்ணிக்கை 2009ம் ஆண்டில் 4 கோடியே 20 இலட்சமாக இருந்தது என்றும் கிராந்தி அவர்கள் கூறினார்.

இந்த மக்களில் ஒரு கோடியே 72 இலட்சம் பேர், ஐ.நா.வின் புலம்பெயர்வோர் நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளனர், இவ்வெண்ணிக்கை 2009ம் ஆண்டிலிருந்து 70 விழுக்காடு அதிகம் என்றும், கிராந்தி அவர்கள் மேலும் கூறினார்




## இளம் பருவத்தினர் கொலை உயர்வு

12 மாதக் குழந்தைகள் உட்பட, வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரின் எண்ணிக்கை, அதிர்ச்சி தரும் அளவில் உயர்ந்துள்ளது என்று ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பான யூனிசெஃப், நவம்பர் 1, புதனன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைகள், உடல் ரீதியான சித்ரவதைகள், கொலைகள் என்று, குழந்தைகளுக்கு எதிராக வளர்ந்துவரும் கொடுமைகள் அதிர்ச்சியளிக்கின்றன என்று யூனிசெஃப் தலைவர் கொர்னேலியுஸ் வில்லியம்ஸ் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இக்கொடுமைகள் அனைத்தும், குழந்தைகளைக் காக்கும் பொறுப்புள்ள உறவுகளின் வழியே உருவாகின்றன என்பது மேலும் அதிர்ச்சி தரும் தகவல் என்று யூனிசெஃப் அறிக்கை கூறுகிறது.

2 முதல் 4 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில், 30 கோடிக்கும் அதிகமானோர், தங்களைக் காக்க வேண்டியவர்களிடமிருந்து, உடல் ரீதியாகவும், மனதளவிலும் கொடுமைகளை அனுபவிக்கின்றனர் என்று இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஒவ்வொரு 7 நிமிடங்களுக்கு ஒரு வளர் இளம் பருவத்தினர் கொலையுறுகின்றார் என்றும், பள்ளிகளில் நடைபெறும் கொடுமைகளால் வளர் இளம் பருவத்தினர் அடையும் பாதிப்புக்கள் அதிகம் என்றும் இவ்வறிக்கை எடுத்துரைக்கின்றது

## சிறார் திருமணங்களை நிறுத்துவது அவசியம்

மேற்கு மற்றும் மத்திய ஆப்ரிக்காவில் சிறார் திருமணங்களை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்படவில்லையெனில், அப்பகுதிகளில் அவற்றை நிறுத்துவதற்கு நூறு ஆண்டுகளுக்கு மேல் எடுக்கக்கூடும் என்று, ஐ.நா.வின் யுனிசெப் எச்சரித்துள்ளது.



இந்நிலை, இலட்சக்கணக்கான சிறார் மணப்பெண்களின் வாழ்வைப் பாதிக்கும் மற்றும் அப்பகுதியின் வளமையை முடக்கும் என்று, யுனிசெப் வெளியிட்ட புதிய அறிக்கை கூறுகின்றது.

சிறுமிகள் பள்ளிகளில் நீண்ட காலம் படிப்பதன் வழியாக, 18 வயதுக்குள் திருமணம் செய்து வைக்கப்படுவது குறையும் என்றும், காம்பியா, கினி பிசாவ், டோகோ, கானா, ருவாண்டா ஆகிய நாடுகளில் கடந்த 25 ஆண்டுகளில், சிறார் திருமணங்கள், 40 முதல் 60 விழுக்காடு வரை குறைந்துள்ளன என்றும் யுனிசெப் கூறியது.

மேற்கு மற்றும் மத்திய ஆப்ரிக்காவில், 18 வயதுக்குமுன், பத்தில் 4 சிறுமிகள் வீதமும், 15 வயதுக்குமுன் மூன்றில் ஒரு சிறுமி வீதமும் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர்

திருத்தந்தை

# மனித மாண்பை காத்தல் அறம்சார்ந்த கடமை



போரிடுகின்றவர்கள், மனிதாபிமானப் பணியாளர்கள் போன்ற எல்லாரும், உலகளாவிய மனித உரிமைக் கோட்பாடுகளை தங்களின் மனசாட்சிகளில் இருத்தி, அவற்றை செயல்களில் வெளிப்படுத்துமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்சனிக்கிழமையன்று அழைப்பு விடுத்துள்ளார்.

பன்னாட்டுச் சட்டத்தின் ஐரோப்பிய கழகம் உரோம் நகரில் நடத்திய, மூன்றாவது உலகளாவிய மனிதாபிமானச் சட்டம் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஏறக்குறைய 250 பிரதிநிதிகளை, இச்சனிக்கிழமை நண்பகலில் திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித உரிமைகள் மீறப்படும் இடங்களில், குறிப்பாக, அவை அச்சுறுத்தப்படும் இடங்களில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதரின் மாண்பு மதிக்கப்பட்டு, பாதுகாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பது, ஒவ்வொருவரின் அறநெறி சார்ந்த கடமையாகும் என்று கூறினார்

ஆயுத மோதல்களில் பாதிக்கப்படுகின்றவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக, ஜெனீவாவில் மேலும் இரு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டதன் நாற்பதாம் ஆண்டு நிறைவில், இக்கருத்தரங்கு நடைபெற்றது மிகவும் முக்கியமானது என்றும் திருத்தந்தை கூறினார்.

இக்காலத்தில் இடம்பெறும் போர்கள், கடும் குற்றங்கள் போன்றவற்றால் மனிதரின் மாண்பும், உரிமைகளும் மீறப்படுகின்றன என்றும், ஆலயங்களும், வழிபாட்டுத் தலங்களும் தாக்கப்படுவதன் வழியாக சமய சுதந்திரம் மீறப்படுகின்றது என்றும் திருத்தந்தை கவலை தெரிவித்தார்.

போர்களின்போது, நம் சகோதர சகோதரிகள் உயிரை இழக்கின்றனர், உறுப்புகள் துண்டிக்கப்படுகின்றன, தலைகள் வெட்டப்படுகின்றன, அவர்கள் சித்ரவதைப்படுத்தப்பட்டு, சிலுவையில் அறையப்படுகின்றனர், அதன்பின் அவர்களின் உடல்கள் அவமானப்படுத்தப்படுகின்றன, மக்கள் வழிபட்டுக் கொண்டிருக்கும்போதே தாக்கப்படுகின்றனர்.. இவ்வாறு மக்களின் அடிப்படை மனித உரிமைகளும் மாண்பும் கடுமையாய் மீறப்படுகின்றன என்றும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அதேநேரம், பாதிக்கப்படும் மக்களுக்கு, திருஅவை மற்றும் ஏனைய அமைப்புகள் உடனடியாக உதவி செய்வதையும், சிறைகளுக்குச் சென்று கைதிகளை மக்கள் சந்திப்பதையும் பாராட்டி ஊக்கப்படுத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# போரின் கனி சாவு ஒன்றே! திருத்தந்தை

இந்த உலகம் மற்றுமொரு போருக்குத் தயாரித்துவருவதுபோல் தெரியும் இக்காலத்தில், வன்முறைகளும், போரினால் ஏற்படும் அழிவுகளும் முடிவுக்கு கொண்டுவரப்படுமாறு இறைவனிடம் கெஞ்சி மன்றாடுவோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறந்தோர் நினைவு நாளில் கேட்டுக்கொண்டார்.

இறந்த அனைத்து ஆன்மாக்களின் நினைவு நாளான நவம்பர் 2, வியாழன் பிற்பகலில், இத்தாலியிலுள்ள அமெரிக்க வீரர்களின் கல்லறையில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய திருத்தந்தை, இன்றைய உலகம், பெரியதொரு போருக்குத் தயாரித்துவரும்வேளை, ஆண்டவரே, இந்த உலகில் இனிமேல் போரே வேண்டாம், ஒருபோதும் வேண்டாம் என்று செபிப்போம் என்றார்.

> கல்லறைகளையும், மரணத்தையும் தவிர, வேறு எதையுமே போர்கள் கொணர்வதில்லை

போரில் கனவுகள் சிதைக்கப்படுகின்றன, மனித வாழ்வு அழிக்கப்படுகின்றது, ஆக போரில் எல்லாமே இழக்கப்படுகின்றது, போரின் கனி மரணமே என்றுரைத்த திருத்தந்தை, திருஅவை இறந்த விசுவாசிகளுக்காகச் சிறப்பு செபங்களை அர்ப்பணிக்கும் இந்நாளில், இக்கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ள இளையோருக்காக, சிறப்பாகச் செபிப்போம் என்று கூறினார்.

கல்லறைகளையும், மரணத்தையும் தவிர, வேறு எதையுமே போர்கள் கொணர்வதில்லை என்றும், மனித சமுதாயம் பாடங்களைக் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை மற்றும், பாடங்களைக் கற்றுக்கொள்ள விரும்பாததாகத் தெரிகின்றது என்றும் மறையுரையில் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோம் நகருக்கு தெற்கே 66 கிலோமீட்டர் தூரத்தில், நெத்தூனோ எனும் கடற்கரை நகரத்தில், 77 ஏக்கர் நிலபரப்பில் அமைந்துள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டு வீரர்களின் கல்லறையில், 7,860 வீரர்களின் கல்லறைகள் உள்ளன. இவற்றில் 16 பெண்கள், பெண்கள் இராணுவப் பிரிவில், செஞ்சிலுவை சங்கத்தில் அல்லது செவிலியர்களாகப் பணியாற்றியவர்கள். இரண்டாம் உலகப்போரின்போது, 1943ம் ஆண்டுக்கும், 1944ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், சிசிலித் தீவை மீட்பதற்காக நடைபெற்ற சண்டையில் இறந்தவர்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# பணத்திற்கு அடிமையாக வேண்டாம்

## மாணவர்களிடம் திருத்தந்தை வேண்டுகோள்

பிரான்ஸ் நாட்டின் லியோன் நகரின் மீக்ஷீமீஙூ.ஜ் என்ற கத்தோலிக்கப் எண்பது, மாணவர்கள் மற்றும் இவ்வியாழனன்று திருப்பீடத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மற்றும் நீதியை ஊக்குவித்து, பாதுகாப்பவர்களாக தங்களைப் கேட்டுக்கொண்டார்.



லிமீஃ சிலீணீக்ஷீ–பள்ளியின் ஏறத்தாழ ஆசிரியர்களை, சந்தித்து உரையாற்றிய உலகில், சமத்துவம் அவற்றைப் பயிற்றுவிக்குமாறு

நிதி உலகில் வேலைவாய்ப்பைப் பெறும் நோக்கத்தில், பெரிய வர்த்தகப் பள்ளிகளில் சேருவதற்காக, இம்மாணவர்கள் தங்களைத் தயாரிப்பது குறித்து மகிழ்வதாகத் தெரிவித்த திருத்தந்தை, பணத்தின் மீது வேட்கை கொள்ளாமலும், பணத்திற்கு அடிமையாகாமலும் இருக்குமாறு கூறினார்.

லிமீஃ சிலீணீக்ஷீக்ஷீமீஙூ.ஜ் பள்ளியில், உறுதியான மனிதாபிமான, மெய்யியல் மற்றும் கலாச்சாரக் கூறுகள் நிறைந்த பயிற்சியைப் பெறுகின்ற இம்மாணவர்கள், இப்போதும், வருங்கால வேலைகளிலும், பணத்தின்மீதான வேட்கையினின்று சுதந்திரமாக வாழுமாறு கூறியத் திருத்தந்தை, பணம், தன்னை வணங்குவோரைத் தனக்கு அடிமையாக்கிவிடும் என்றும் எச்சரித்தார்.

உலகச் சந்தையின் மறைவான கரங்களுக்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படியாமல் இருப்பதற்குச் சக்தியையும், துணிச்சலையும் கொண்டிருக்க வேண்டியது முக்கியம், இதன் வழியாக, சமத்துவத்தில் வளர்ச்சியைப் பாதுகாத்து ஊக்குவிக்க முடியும் என்றும், இவ்வுலகமாகிய நம் பொதுவான இல்லத்தை நீதியுடன் நிர்வாகம் செய்யும் கைவினைஞர்களாக மாற முடியும் என்றும், இம்மாணவர்களிடம் கூறினார், திருத்தந்தை. ஏழை மனிதருக்கு எதிராக இழைக்கப்படும் ஒவ்வொரு அநீதியும், திறந்த காயமாக இருந்து, உங்களின் மாண்பையே குறைக்கும் என்பதை ஒருபோதும் மறந்துவிடாமல், இந்த உலகுக்கும், ஒவ்வொரு மனிதருக்கும் பொறுப்புள்ளவர்களாய் மாறுமாறு, ப்ரெஞ்ச் கத்தோலிக்கப் பள்ளி மாணவர்களிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



கர்த்தூசியின் சபை துறவிகள் நடத்தும் இப்பள்ளி மாணவர்கள், தங்கள் படிப்பின் ஒரு பகுதியாக உரோம் நகரில் படித்து வருகின்றனர். இதைப் பயன்படுத்தி இவர்கள் திருத்தந்தையை சந்தித்தனர்.

தலையங்கம்

# விவேகத்துடன் செயல்பட்ட அருட்சகோதரி

நலிந்தோர் வாழ்வு ஏற்றம் பெற உயிர் தியாகம் செய்த அருட்சகோதரி இராணி மரியாவை திருச்சபை இரத்தசாட்சியாக ஏற்று முத்திப்பேறு பட்டம் கொடுத்து அழகுப் பார்த்திருக்கிறது. நாற்பத்தியொன்று வயதாகும் போது உடலிலே 54 குத்துகளை ஏற்ற அருட்சகோதரிக்கு தன்னுடைய உயிர் ஆபத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்பதை முன்னரே அறிந்திருந்தார். ஆனால் அஞ்சி அவர் ஒதுங்கவில்லை. மிரட்டல் இருந்தும், 'ஆபத்தான' இயேசுவின் பணியை தொடர்ந்து செய்தது சற்று விவேகமற்றச் செயலாக சிலருக்காவது தென்படலாம். ஆனால், அவ்வாறு வாழ்ந்திடவே, விவேகத்தைத் தரும் தூய ஆவியானவர் அழைக்கிறார் என்பதை அறிந்து, தெளிவுடன் செயல்பட்டு இன்று விண்ணரசில் மலராக பூத்திருக்கிறார்.

நிலக்கிழார் உருவாக்கி வைத்திருந்த, சமுதாயக் கட்டமைப்பில், ஏழைகள் முதலாளியை சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அதை சற்றே அசைத்துப் பார்த்தார் அருட்சகோதரி இராணி மரியா. முதலாளி தயவில் வாழ்வை மக்கள் நகர்த்திக்கொண்டிருந்தனர். எம்பெருமான் இயேசுவின் விருந்து மேசையில் அனைவரும் நிகர் என்பதைக் குறித்த தெளிவு பெற்றிருந்த இராணி மரியா, சுயமாக சம்பாதித்து சொந்தக் காலில் நிற்கும் வித்தையை ஏழைகளுக்குக் கற்றுக் கொடுத்தார். ஊழல் மலிந்திருந்த அரசு அலுவலகங்கள் ஒவ்வொன்றாக, மக்கள் நலனுக்காக கால்கடுக்க நடந்தார். அரசு சலுகைகள் ஏழைகளுக்குக் கிடைக்கச் செய்தார்.

ஏழை பணக்காரர் என்னும் மேடு பள்ளம் மேலோங்கி அதுவே நியதியாகிப்போன சமுதாயத்தில், இயேசு கண்ட விண்ணரசின் மதிப்பீடுகளை, சமத்துவ உலகின் கனவுகளை மக்கள் மனதில் விதைத்திட தீவிரமாக செயல்பட்டார். சுயமரியாதை மிக்க நல்வாழ்வு சாத்தியம் என்பதை எண்பித்துக் காண்பித்தார். அதுவே அவருடைய வாழ்வை காவு வாங்குவதற்கு காரணமும் ஆயிற்று.

ஏழை பணக்காரர், என்னும் வேறுபாட்டை பேணிக்காப்பதில் கிறிஸ்தவ விசுவாசத்தின் பங்களிப்பும் உண்டு என்பதே உண்மை.. 'உலகோடு ஒத்து ஒழுகுதல்' என்பது விவேகம் என்னும் தலையாய புண்ணியத்தின் பகுதியாக பார்க்கும் நிலையும் மேலோங்கி நிற்கிறது. அக்கண்ணோட்டத்தில் பார்க்கும போது, இராணி மரியா செய்தது விவேகமற்றச் செயல் என்றே படும். ஆனால், இறை இயேசுவின் மனதை அவர் அறிந்தார். அவருடைய உணர்வுகளை வாழ்வில் ஏற்றார். அவரே ஏழைகளின் வடிவில் துன்புறுகிறார் என்பதைக் கண்டார். ஏழைகளுக்காக வாழ்வை அர்ப்பணித்தலே, இயேசு விரும்பும் விவேகம் என்பதை தேர்ந்து தெளிந்தார். அத்தகைய தேர்ந்து தெளிதலே விவேகம் என்பதை தூய ஆவியின் துணையுடன் தெள்ளத்தெளிவாய் அறிந்து கொண்டார். அதனால், பிளவு படா உள்ளத்துடன் இயேசுவுக்காய், ஏழைகளின் மத்தியில் பணி புரிந்தார்.

ஆக, சுயம் காப்பதற்காகவும், அமைப்பாக்கம் பெற்ற பாவங்களை தக்க வைப்பதற்காகவும் தீவிரமாக முயல்வது அல்ல விவேகம். மாறாக, நீதி, நேர்மை, சமத்துவம் போன்ற விண்ணரசின் மதிப்பீடுகளை சமுதாயத்தில் ஏற்படுத்திட வாழ்வில் தீர்க்கமான தீர்மானங்களை எடுத்திட உதவுவதே விவேகம் என்னும் தூய ஆவியின் கொடை.

**"நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!"** (ஆமோ 5: 24) என்னும் ஆமோஸ் இறைவாக்கினரின் ஆசையை கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் வாழ்வில் ஏற்றிட, இம்மாபெரும் பெண் துறவி மாதிரியாக திகழ்வாராக! அவரே நமக்காக பரிந்தும் பேசுவாராக.

# The Sister of the Smile
# 'புன்னகை சகோதரி'
## திருத்தந்தை பெருமிதம்



"1995 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட, பிரான்சிஸ்கன் கிளாரா சபையைச் சேர்ந்த அருட்சகோதரி இராணி மரியா வட்டாலி அவர்கள், இந்தியாவில் இன்டோரில் வைத்து முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார். அன்பாலும் எளிமையாலும் இயேசுவுக்கு சாட்சியம் புரிந்த அருட்சகோதரி அவர்கள் இரத்தசாட்சிகளின் வரிசையில் இடம் பெற்றிருக்கிறார். அவருடைய தியாக வாழ்வு, விசுவாசத்தினைடயவும் அமைதியினுடையவும் விதையாக, குறிப்பாக, இந்தியாவில் விளங்குகிறது. இது அரிய காரியம். மக்கள் அவரை, 'புன்னகை சகோதரி' என அன்பாய் அழைத்தனர்."

இவ்வாறு திருத்தந்தை பிரான்சிஸ், 05.11.2017 மறைக்கல்வி உரையின் போது கூறினார்.

# நீதியின் மேல் தாகம் கொண்ட அ.சகோதரி இராணி மேரி

இறையடியாரான அருள் சகோதரி இராணி மேரி அவர்கள், நீதியின் மேல் தாகம் கொண்டிருந்ததால் 54 கத்திக்குத்துக்களைத் தாங்கி கொலையுண்டார் என்றும், தான் கொலை செய்யப்பட்ட வேளையில் இயேசுவின் திருநாமத்தைக் கூறியபடியே இறந்தார் என்றும் வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

நவம்பர் 4, வரும் சனிக்கிழமையன்று இந்தியாவின் போபால் நகரில் அருளாளராக உயர்த்தப்படவிருக்கும் அருள் சகோதரி இராணி மேரி அவர்களைக் குறித்து, புனிதர்பட்ட வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் திருப்பீட பேராயத்தின் தலைவர், கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ அவர்கள், வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.



அருள் சகோதரி இராணி மேரி அவர்கள், இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், திருஅவையில் நீதிக்காகப் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும், உந்து சக்தியாகவும் திகழ்கிறார் என்று கர்தினால் அமாத்தோ அவர்கள் கூறினார்.

நவம்பர் 4, சனிக்கிழமை, அருள் சகோதரி இராணி மேரி அவர்கள், அருளாளராக உயர்த்தப்படும் திருப்பலியை, கர்தினால் அமாத்தோ அவர்கள் தலைமையேற்று நடத்துவார் என்றும், அதற்கு அடுத்தநாள், உதைநகரில் நடைபெறும் சிறப்புத் திருப்பலியில், கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் உட்பட, பல கர்தினால்களும், ஆயர்களும் கலந்துகொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முத்திப்பேறு பெற்ற இராணி மரியா பெயரில் ஆலயம்

இன்டோர் மறைமாவட்டத்தில் உதய்நகரில் அமைந்துள்ள ஆலயம், முத்திப்பேறுப் பெற்ற இராணிமரியாவை பாதுகாவலராகக் கொண்டு செயல்படும் என, அம்மறைமாவட்ட ஆயர் அறி-வித்துள்ளார். திருஇருதய ஆண்டவரின் பெயரில் இயங்கி வந்த இவ்வாலயத்தில் தான் முத்திப்பேறு பெற்ற இராணி மரியா அவர்களுடைய கல்லறை இடம் பெற்றுள்ளது.



**"ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்கள் ஏற்றம் பெற இரத்தம் சிந்திய முத்திப்பேறு பெற்ற இராணி மரியா, நமக்கென்றும் மாதிரியாக உள்ளார்."**

- ஆயர் சாக்கோ தோட்டுமுறிக்கல், ஆயர், இந்தோர்.

**"அருள் சகோதரி இராணி மேரி அவர்கள், நீதியின் மேல் தாகம் கொண்டிருந்ததால் 54 கத்திக்குத்துக்களைத் தாங்கி கொலை செய்யப்பட்டார். இறக்கும் போது அவர் நா இயேசு நாமம் கூறிக்கொண்டிருந்தது."**

- கர்தினால் அமாத்தோ, புனிதர்பட்ட வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் திருப்பீட பேராயத்தின் தலைவர்.

திருத்தந்தை



## புனித பூமியில்
# நீடித்த அமைதி விரைவில்

புனித பூமியில், நீடித்த மற்றும் நிலையான அமைதி, விரைவில் கிட்டும் என்ற தனது நம்பிக்கையையும் செபத்தையும் தெரி-வித்து, எருசலேமின் அமைதிக்காகச் செபிப்போம் என்று, முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் (ஜிலீமீஷீஜீலீ-ரீஷீ மிமிமி) அவர்களிடம், இத்திங்களன்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

எருசலேமின் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் அவர்கள் தலைமை-யிலான குழுவை, இத்திங்களன்று வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, தான் எருசலேமுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டபோது, தனக்குக் கொடுத்த வரவேற்பையும், முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் அவர்களுடன் சேர்ந்து செபித்ததையும் நன்றியுடன் குறிப்பிட்டார்.



கத்தோலிக்கத் திருஅவைக்கும், கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபைக்கும் இடையே நூற்றாண்டுகளாக இடம்பெற்ற, பிறரன்பின் பெரும் தவறுகளை மறக்காமல், கடந்தகாலத்தை மாற்றுவது என்பது இயலக்கூடியதல்ல எனினும், நம் ஆண்டவர் விரும்பும் முழு ஒப்புரவு மற்றும் உடன்பிறப்பு ஒன்றிப்பின் வருங்காலத்தை நோக்குவோம் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அதிலும், இக்காலத்தில் இவ்வாறு செய்யத் தவறுவது பெரும் குறையாக இருக்கும் என்றும், கத்தோலிக்கருக்கும், ஆர்த்தடாக்ஸ் சபையினருக்கும் இடையே இடம்பெற்றுவரும் இறையியல் உரையாடல், முழு ஒன்றிப்பை நோக்கிய நம் பயணத்திற்கு உதவும் என்றும் திருத்தந்தை கூறினார்.

புனித பூமியில் இடம்பெற்றுவரும் மோதல்களால் துன்புறும் அனைத்து மக்களுடனும் தான் ஒருமைப்பாடு கொள்வதாகவும், அனைவரின் உரிமைகளை அங்கீகரிக்கும் நீதியின் அடிப்படையில் நிலையான அமைதிக்கு, அதற்குப் பொறுப்பானவர்கள் தங்களின் முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டுமென விண்ணப்பிப்பதாகவும் திருத்தந்தை கூறினார்.

யூத, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் விசுவாசிகளுக்கும், அவர்களின் வழிபாட்டுத்தலங்களுக்கும் எதிராக காட்டப்படும் எந்தவிதமான வன்முறை, பாகுபாடு மற்றும் சகிப்பற்ற நடவடிக்கைகள், புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும், உருக்கமாக அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எருசலேமின் உலகளாவிய தன்மை பாதுகாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும், அனைவரும் அமைதியாக வாழக்கூடிய இடமாக எருசலேம் மாற வேண்டும், இல்லாவிடில், துன்பங்கள் முடிவின்றி தொடரும் எனவும் எச்சரித்த திருத்தந்தை, கிறிஸ்தவக் குடும்பங்களும் இளையோரும் புனித பூமியைவிட்டு புலம்பெயராமல் இருப்பதற்கு, பல்வேறு கிறிஸ்தவ குழுக்களிடையே ஒத்துழைப்புக்கும் விண்ணப்பித்தார்.

புனித பூமியிலுள்ள பல்வேறு கிறிஸ்தவ குழுக்களும், சமுதாயத்தின் ஒருங்கிணைந்த குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்டு, அவர்கள் தங்களின் சொந்த உரிமைகளைக் கொண்டிருந்து, அமைதிக்கும், பொதுநலனுக்கும், ஒப்புரவுக்கும், நல்லிணக்கத்திற்கும் தொடர்ந்து உழைப்பார்கள் என்ற தனது நம்பிக்கையையும், அக்குழுக்களுக்கு தன் நல்வாழ்த்துக்களையும் தெரி-வித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் அவர்கள் தலைமையிலான குழு, திருத்தந்தையை சந்தித்த பின், திருப்பீட செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின், பன்னாட்டு உறவுகளின் திருப்பீட செயலர் பேராயர் பால் ரிச்சர்டு காலகர் ஆகிய இருவரையும் அக்குழு சந்தித்தது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2014ம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட எருசலேம் திருத்தூதுப் பயணத்தின்போது முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் அவர்களைச் சந்தித்தார். மேலும், அதே ஆண்டு ஜூன் மாதத்தில், வத்திக்கான் தோட்டத்தில் அமைதிக்காக இடம்பெற்ற பல்சமய செப வழிபாட்டிலும் முதுபெரும் தந்தை மூன்றாம் தெயோபிலோஸ் அவர்கள் கலந்துகொண்டார்.

## அருள்பணியாளர்கள்
# நம்பிக்கையின் அடையாளம்



உரோம் நகரிலுள்ள பிரேசில் திருஅவையின், பாப்பிறை பியோ குருத்துவ கல்லூரியின் ஏறத்தாழ நூறு அருள்பணியாளர் மாணவர்களை 04.11.2017, சனிக்கிழமையன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிரேசில் நாட்டு வரலாற்றில் இன்னல்கள் மிகுந்த இக்காலத்தில், அருள்பணியாளர்கள் நம்பிக்கையின் அடையாளமாக விளங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அப்பரெசிதா அன்னை மரியா காட்சியளித்ததன் 300ம் ஆண்டை முன்னிட்டு, இந்த அருள்பணியாளர் மாணவர்கள் மற்றும் நிர்வாகிகளைச் சந்தித்த திருத்தந்தை, பிரேசில் நாட்டில் இடம்பெறும் சமூகப் பிரச்சனைகள் மற்றும் துர்மாதிரிகை நிறைந்த ஊழலால், நல்லதோர் எதிர்காலத்தின் மீது ஏராளமான குடிமக்கள் நம்பிக்கை இழந்துள்ளதுபோல் தெரிகின்றது என்று கூறினார்.

ஒன்றிணைந்து, உடன்பிறப்பு உணர்வோடு, ஒருமைப்பாட்டுடன் செயல்படும் அருள்பணியாளர்கள் பிரேசில் நாட்டிற்குத் தேவைப்படுகின்றனர் என்றும், இதன் வழியாக, அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை ஒன்றுசேர்ந்து சந்திக்க இயலும் என்றும் திருத்தந்தை கூறினார்.

பிரேசில் நாடு தற்போதைய பிரச்சனைகளிலிருந்து மீண்டு வரும் மற்றும், இதில் அருள்பணியாளர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என்பதில், தான் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

புறணி பேசுதல், அருள்பணியாளரின் உடன்பிறப்பு உணர்வை அதிகமாகச் சிதைக்கும் என்றும், புறணி பேசுதல், ஒரு பயங்கரவாதச் செயல் என்றும், புறணி பேசுவதால் ஒரு குண்டு போடப்பட்டு, மற்றவர் அழிக்கப்படுகின்றார் என்றும் திருத்தந்தை எச்சரித்தார்.

## திருஅவைக்கு தேவை

# தாயன்புமிக்க மறைப்பணியாளர்

“திருஅவை, தாய் போலவும், மறைப்பணியாளராகவும் இருந்து பிறரைச் சந்திக்கச் சென்றால், அது உண்மையிலேயே உயிர்த்துடிப்புடன் இருக்கின்றது” என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இச்சனிக்கிழமையன்று கூறினார்.

அக்டோபர் 22, இஞ்ஞாயிறன்று 91வது உலக மறைபரப்பு தினம் சிறப்பிக்கப்படுவதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட டுவிட்டரில், மக்களுக்கு மறைப்பணியாற்றுகையில், தாயன்புடன் செயல்படுமாறு திருஅவைக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், உலகில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், அவ்வெண்ணிக்கை உலக மக்கள் தொகையில் 17.7 விழுக்காடு, அதாவது ஏறத்தாழ 130 கோடி என்றும், திருஅவையின் புள்ளி விவர நூல் கூறுகின்றது.

2015ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி நிலவரப்படி, 2014ம் ஆண்டில் திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கரின் எண்ணிக்கையைவிட, 2015ம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை ஒரு கோடியே 25 இலட்சம் அதிகரித்திருந்தது என்றும், அந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

ஆப்ரிக்க மக்கள் தொகையில் 19.42 விழுக்காடு, அதாவது ஏறத்தாழ 22 கோடியே 20 இலட்சம்; அமெரிக்க மக்கள் தொகையில் 63.6 விழுக்காடு, அதாவது ஏறத்தாழ 63 கோடியே 50 இலட்சம்; ஐரோப்பிய மக்கள் தொகையில் 39.87 விழுக்காடு, அதாவது ஏறத்தாழ 28 கோடியே 50 இலட்சம்; ஆசிய மக்கள் தொகையில் 3.24 விழுக்காடு அதாவது ஏறத்தாழ 14 கோடியே 10 இலட்சம்... என்று உலகில் கத்தோலிக்கர் உள்ளனர்.

மேலும், உலகில் கத்தோலிக்கத் திருஅவை, 2 இலட்சத்து 16 ஆயிரத்து, 548 பள்ளிகளை நடத்துகின்றது என்றும், இவற்றில் ஆறு கோடிக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இன்னும், மருத்துவமனைகள், தொழுநோயாளர் மையங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற, ஏறத்தாழ ஒரு இலட்சத்து 18 ஆயிரம் கத்தோலிக்க நலவாழ்வு மையங்கள் உள்ளன என்றும் அந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

# புனித பூமியில் 800 ஆண்டுகள்

## பிரான்சிஸ்கன் சபையினருக்கு திருத்தந்தை கடிதம்

பிரான்சிஸ்கன் சபையினர், புனித பூமியின் பாதுகாவலர்களாகப் பணியைத் தொடங்கி 800 ஆண்டுகள் நிறைவுறும் இவ்வேளையில், புனித பூமியில் கிறிஸ்தவ வாழ்வுக்குத் தொடர்ந்து சான்று வழங்கிவரும் அச்சபையினர் அனைவருக்கும், தனது சிறப்பு வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.




புனித பூமியின் பாதுகாவலுக்குப் பொறுப்பான, பிரான்சிஸ்கன் அருள்பணி Francesco Patton அவர்களுக்கு, இந்த 800ம் ஆண்டையொட்டி கடிதம் அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருத்தந்தை 6ம் கிளமென்ட் தொடங்கி, தனக்கு முந்தைய திருத்தந்தையர், புனித பூமியைப் பாதுகாப்பதற்கு, பிரான்சிஸ்கன் சபையினரிடம் ஒப்படைத்ததை, தானும் புதுப்பிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

1217ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பெந்தக்கோஸ்து பொதுப் பேரவையில், அருள்பணி பிரான்சிஸ்கோ அவர்கள், மறைப்பணி மற்றும் உலகளாவிய கூறுக்குத் திறந்த மனதுள்ளவர்களாய், விசுவாசம், உடன்பிறப்பு உணர்வு மற்றும் அமைதியின் சான்றுகளாக, பிரான்சிஸ்கன் சபையின் அருள்பணியாளர்கள், உலகெங்கும் சென்று, வாழ்வதற்கு அழைப்பு விடுத்ததையும், தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இவ்வாறு புனித பூமியில், பிரான்சிஸ்கன் சபையின் மாநிலம் உருவாகி, அது முதலில், வெளிநாடு அல்லது சிரியா என அழைக்கப்பட்டது என்றும், பின்னாளில் இம்மாநிலத்தின் பணி விரிவடைந்தது என்றும், முதலில் 8 அருள்பணியாளர்கள் புனித பூமியில் பணியைத் தொடங்கியதன் 800ம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள், கடந்த ஜூன் 11ம் தேதி தொடங்கியுள்ளது என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

புனித பூமியில் தொல்பொருள் ஆய்விலும், பெத்லகேமில் பல ஆண்டுகள் தங்கி, விவிலிய ஆய்வு செய்த புனித ஜெரோம் அவர்களின் மரபில், விவிலியத்தைக் கவனமாய் படிப்பதிலும் இச்சபையினர் தொடர்ந்து காட்டிவரும் ஆர்வத்தையும் பாராட்டியுள்ளார், திருத்தந்தை.

புனித பூமியில் தலத்திருஅவை குழுக்களுக்கும் உதவுவதோடு, ஏழைகள் மற்றும் நலிந்தவர்களுக்கு இச்சபையினர் ஆற்றிவரும் பணிகளைத் தொடருமாறும், இச்சபையை ஆரம்பித்தவரின் நோக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறும், தன் செய்தியில், பிரான்சிஸ்கன் சபையினரைக் கேட்டுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## இந்திய ஆயர்களுக்கு திருத்தந்தை கடிதம்

# பிளவுபடாமல் ஒன்றிப்புடன் செயல்பட அழைப்பு

இந்தியாவிலுள்ள கத்தோலிக்கத் திருஅவையின் பாதை, தனித்துவிடப்பட்ட மற்றும், பிரிவினை கொண்டதாக இல்லாமல், மதிப்பும், ஒத்துழைப்பும் கொண்டதாக இருக்க வேண்டுமென்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்திய ஆயர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியாவில் 09.10.2017 திங்களன்று உருவாக்கப்பட்டுள்ள மற்றும், விரிவாக்கப்பட்டுள்ள புதிய மறைமாவட்டங்களில், சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் விசுவாசிகளுக்கு மேய்ப்புப்பணியாற்றுவதற்கு, கீழை வழிபாட்டுமுறை பேராயத்திற்கு அனுமதி வழங்குவதாகத் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்திய ஆயர்களுக்கு திருத்தந்தை எழுதியுள்ள ஒரு நீண்ட கடிதத்தில், இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, இந்தியாவில் இலத்தீன் வழிபாட்டுமுறையின் மறைமாவட்டங்களில் வாழ்கின்ற, சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் விசுவாசிகளின் மேய்ப்புப்பணி தேவைகள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக, முந்தைய திருத்தந்தையர் 16ம் பெனடிக்ட், புனித 2ம் ஜான் பால் ஆகிய இருவரின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளார்.

சீரோ-மலபார் வழிபாட்டுமுறை சமூகங்கள் விழாக்கள் கொண்டாடவும், மற்ற நிகழ்வுகளை நடத்தவும், இலத்தீன் வழிபாட்டுமுறை திருஅவை, தனது கட்டடங்களைக் கொடுத்து உதவுமாறும், இவ்விரு வழிபாட்டுமுறைகளுக்கு இடையே ஒத்துழைப்பும், நல்லிணக்கமும் தொடர்ந்து நிலவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

சீரோ-மலபார் வழிபாட்டுமுறை சமூகங்கள் விழாக்கள் கொண்டாடவும், மற்ற நிகழ்வுகளை நடத்தவும், இலத்தீன் வழிபாட்டுமுறை திருஅவை, தனது கட்டடங்களைக் கொடுத்து உதவுமாறும், இவ்விரு வழிபாட்டுமுறைகளுக்கு இடையே ஒத்துழைப்பும், நல்லிணக்கமும் தொடர்ந்து நிலவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்

இந்தியாவில் கத்தோலிக்கத் திருஅவை, திருத்தூதர் புனித தோமையாரின் போதனையால் வளர்ந்து, பின் கல்தேய மற்றும் அந்தியோக்கிய திருஅவைகளின் மரபுகளால் வளர்ந்தது என்பதையும், பின் 16ம் நூற்றாண்டிலிருந்து இலத்தீன் வழிபாட்டுமுறை மறைபோதகர்களின் முயற்சிகள் வழியாக, திருஅவை பரவியது என்பதையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# மியான்மார், பங்களாதேஷுக்கு திருத்தையின்
# திருத்தூதுப்பயண விவரங்கள்

வருகிற நவம்பர் 26ம் தேதி முதல், டிசம்பர் 2ம் தேதி வரை, மியான்மார் மற்றும், பங்களாதேஷ் நாடுகளுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப்பயண விவரங்களை, 10.10.2017 செவ்வாயன்று திருப்பீடம் வெளி-யிட்டது.

நவம்பர் 26ம் ஞாயிறு இரவு 9.40 மணிக்கு, உரோம் ஃபியூமிச்சினோ பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து, மியான்மார் தலைநகர் யாங்கூனுக்குப் புறப்படும் திருத்தந்தை, நவம்பர் 27, திங்கள் பகல் 1.30 மணிக்கு யாங்கூன் சென்றடைவார்.

யாங்கூனில் நடைபெறும் அதிகாரப்பூர்வ வரவேற்பிற்குப்பின், 28ம் தேதி, Nay Pyi Taw செல்வார் திருத்தந்தை. அங்கு, அரசுத்தலைவர் மாளிகையில் வரவேற்பு, அரசுத்தலைவரைச் சந்தித்தல், நாட்டின் ஆலோசகர்கள் மற்றும், வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்தல், மாலை 5.15 மணிக்கு, அரசு, தூதரக மற்றும் பல அதிகாரிகளைச் சந்தித்தல் ஆகிய நிகழ்வுகளை நிறைவேற்றி, யாங்கூன் சென்று பேராயர் இல்லத்தில் இரவு உணவு உண்டு உறங்கச் செல்வார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 29ம் தேதி யாங்கூனில் திருப்பலி, அன்று மாலையில் புத்தமதத் துறவிகளின் உயர் அவை-யினரைச் சந்தித்தல், ஆயர்களைச் சந்தித்தல் போன்ற பயணத் திட்டங்களை நிறைவேற்றியபின், 30ம் தேதி வியாழனன்று, யாங்கூன் பேராலயத்தில் இளையோரைச் சந்திப்பார் திருத்தந்தை.

நவம்பர் 30ம் தேதி மாலை 3 மணியளவில் பங்களாதேஷ் நாட்டின் டாக்கா செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தேசிய மறைசாட்சிகள் நினைவிடத்தைப் பார்வையிடுதல், அரசுத்தலைவரைச் சந்தித்தல், அரசு, தூதரக மற்றும் பல முக்கிய அதிகாரிகளைச் சந்தித்தல் ஆகிய நிகழ்வுகளை நிறைவேற்றுவார்.

டிசம்பர் முதல் தேதி, வெள்ளிக்கிழமையன்று, Suhrawardy Udyan பூங்காவில் திருப்பலி நிறைவேற்றல், திருப்பீட தூதரகத்தில் பிரதமரைச் சந்தித்தல், ஆயர்களுக்கு உரையாற்றுதல், பல்சமய மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுவினரைச் சந்தித்தல் போன்ற நிகழ்வுகளை திருத்தந்தை நிறைவேற்றுவார்.

டிசம்பர் 2, சனிக்கிழமையன்று, ஜிணியிறிகி-ளிழில் புனித அன்னை தெரேசா சபை-யினரின் இல்லத்தைப் பார்வையிடுதல், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், குருத்துவமாணவர்கள் மற்றும் புகுமுகத் துறவிகளைச் சந்தித்தல், இளையோரைச் சந்தித்தல், பழங்காலக் கல்லறையைப் பார்வையிடுதல் போன்ற பயண நிகழ்வுகளை நிறைவேற்றியபின், உரோம் நகருக்குப் புறப்படுவார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், டிசம்பர் 2, சனிக்கிழமை இரவு 11 மணிக்கு, உரோம் சம்பினோ விமான நிலையத்தில் வந்திறங்குவார் என திருப்பீடம் அறிவித்துள்ளது.

# ரொஹிங்கியா அகதிகள்
# திருத்தந்தையின் பயணத்தில் நம்பிக்கை

மியான்மாரில் அடக்குமுறைக்கு அஞ்சி, நாட்டைவிட்டு வெளியேறியுள்ள ரொஹிங்கியா இன புலம்பெயர்ந்துள்ள மக்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மியான்மார் திருத்தூதுப்பயணத்தின் மீது மட்டுமே நம்பிக்கை வைத்துள்ளனர் என, ஹிசிகி செய்தி கூறுகின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மியான்மார் திருத்தூதுப்பயணம், அந்நாட்டில் மாற்றத்தைக் கொணரும் என்று தாங்கள் நம்புவதாக, பங்களாதேஷ் நாட்டில் புலம்பெயர்ந்துள்ள ரொஹிங்கியா மக்கள் கூறியுள்ளனர்.

ரொஹிங்கியா இனத்தவரான ஷிஹ்மீபீ கிறீணீபீ அவர்கள் பேசுகையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மியான்மாருக்கும், பங்களாதேஷிற்கும் திருத்தூதுப்பயணம் மேற்கொள்வது நல்லதோர் அடையாளம், பல்வேறு நாடுகளில் அமைதியை ஊக்குவித்துள்ள திருத்தந்தை, மியான்மாருக்கு அமைதியைக் கொணர்வார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார்.

மேலும், பங்களாதேஷ் நாட்டிற்கு, நான்கு இலட்சத்து இருபதாயிரத்துக்கு மேற்பட்ட ரொஹிங்கியா மக்கள் புலம்பெயர்ந்துள்ளவேளை, ஏறத்தாழ ஏழு இலட்சத்து இருபதாயிரம், ரொஹிங்கியா மற்றும் பங்களாதேஷ் சிறாருக்கு உதவிக்கு விண்ணப்பித்துள்ளது, ஐ.நா.வின் யூனிசெப் நிறுவனம்.

குழந்தைப்பருவம் மறுக்கப்பட்டுள்ள இச்சிறார், நல்லதோர் வருங்காலத்தை அமைப்பதற்கு, உதவிகள் தேவை என, யூனிசெப் நிறுவன செயல்திட்ட இயக்குனர், அந்தோனி லேக் அவர்கள் கூறியுள்ளார்.

மியான்மாரில் 135 வகையான பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர்.

# பங்களாதேஷ்
# திருத்தூதுப் பயணங்களுக்குத் தயாரிப்பு




இம்மாதம் 30ம் தேதி முதல், டிசம்பர் 2ம் தேதி வரை, பங்களாதேஷ் நாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணத் தயாரிப்புகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என்று, டாக்கா பேராயர் கர்தினால் பாட்ரிக் ரொசாரியோ அவர்கள் அறிவித்தார்.

திருத்தந்தையின் பயணத்திட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கென மக்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வது, கூட்டங்கள் நடத்துவது, ஆலயங்களில், திருப்பயணிகள் குழுவாகச் செபிப்பது என்று, பன்முகத் தயாரிப்புகள் இடம்பெற்று வருகின்றன என்று, கர்தினால் பாட்ரிக் ரொசாரியோ அவர்கள், ஆசியச் செய்தியிடம் கூறினார்.

உதயன் பூங்காவில் திருத்தந்தை நிறைவேற்றவிருக்கும் திருப்பலியில், ஏறத்தாழ ஒரு இலட்சம் கத்தோலிக்கரும், பிற கிறிஸ்தவ சபைகளிலிருந்து ஏறத்தாழ பத்தாயிரம் பேரும், டாக்கா பேராலய நிகழ்வில் ஏறத்தாழ 800 பொதுநிலை-யினரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார், கர்தினால் பாட்ரிக் ரொசாரியோ.

மேலும், இஸ்லாமியக் குழுக்களால் எதுவும் அசம்பாவிதம் ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்காக, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று செய்திகள் கூறுகின்றன.

# சாம்பலில் பூத்த சரித்திரம்

## அர்மேனியாவும் கிறிஸ்தவமும் - 3

**அர்மேனியா, உலக வரலாற்றில் முதல் கிறிஸ்தவ நாடாக மாறியது**

அர்மேனியா நாட்டில் கி.பி.301ம் ஆண்டில், கிறிஸ்தவம் அரசு மதமாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம், அர்மேனியா, உலக வரலாற்றில் முதல் கிறிஸ்தவ நாடாக மாறியது. இதற்கு காரணமாக இருந்தவர், புனித கிரகரி. காரணியாக இருந்த நிகழ்வு, அர்மேனிய அரசர் மூன்றாம் திரிடாற்ஸ் (Tiridates) இன் மனமாற்றம். இந்த அரசரின் செயலரான அகத்தாஞ்சலோஸ் (Agathangelos) என்பவர், 5ம் நூற்றாண்டில் எழுதிய "அர்மேனியர்களின் வரலாறு" என்ற நூலிலிருந்து, அரசர் மூன்றாம் Tiridatesன் மனமாற்றம் பற்றி அறிகிறோம்.

### புனித கிரகரி

புனித கிரகரி அவர்கள், மிகவும் மதிப்புமிக்க உயர் குடும்பத்தில் பிறந்தவர். இவரின் தந்தை ஆனக் (Anak) என்பவர், முதலாம் Ardashir என்பவரின் ஆணைப்படி, அர்மேனிய அரசர் 2ம் கொஸ்ரோவ் (Khosrov) என்பவரை, கி.பி. 252ம் ஆண்டில் கொலை செய்தார். இவரின் மரணத்தையடுத்து, இவரின் மகன் மூன்றாம் Tiridates ஆட்சியில் அமர்ந்தார். Tiridates, கிரகரியின் அப்பா, இன்னும் அவர் குடும்பத்தினர் பலரைத் தூக்கிலிட்டார். அச்சமயத்தில் குழந்தையாக இருந்த கிரகரி, இந்தப் படுகொலைகளிலிருந்து தப்பிக்க வைக்கப்பட்டார். கிரகரி, செசாரியாவில் கிறிஸ்தவக் குடும்பம் ஒன்றில் கிறிஸ்தவராக வளர்க்கப்பட்டார். தனது தந்தையின் தவறை அறிந்து வருந்தி, மீண்டும் அர்மேனியா சென்று இராணுவத்தில் சேர்ந்தார். அரசருக்கும் செயலராகப் பணியாற்றினார் கிரகரி.

அர்மேனியாவில் மூன்றாம்

### சிறையில் தள்ளப்பட்ட கிரகரி

நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவம் உறுதியாக வேரூன்றியிருந்தாலும், பெருமளவான நாட்டு மக்கள் வேற்று தெய்வங்களை வழிபட்டு வந்தனர். இதற்கு அரசர் Tiridatesம் விதிவிலக்கல்ல. இந்த அந்நிய தெய்வ வழிபாட்டின்போது ஒருநாள் அரசர், கிரகரியிடம், எரிசா (Eriza) வின் அனாகித் (Anahit) என்ற பெண் தெய்வத்தின் காலடிகளில் மலர் சூட்டுமாறு ஆணையிட்டார். ஆனால் கிரகரி, தனது கிறிஸ்தவ விசுவாசத்தை அறிவித்து, அரசரின் ஆணைக்கு அடிபணிய மறுத்துவிட்டார். அரசருக்குக் கோபம் கொப்பளித்தது. அங்கு சுற்றி நின்றவர்கள், கிரகரி, உம் தந்தையைக் கொன்றவனின் மகன், ஒரு துரோகி என்று கூச்சலிட்டனர். இதனால் அரசரின் கோபம் கட்டுக்கடங்காமல் போனது. கிரகரியை பிடித்து கொடுமையாய் துன்புறுத்தி, பாழடைந்த பாதாள இருட்டறையில் தூக்கிப்போட்டனர்.

இதற்கிடையே, கிரகிரி கைது

### நோயால் தாக்கப்பட்ட அரசர்

செய்யப்பட்டிருந்த ஆண்டுகளில், உரோமையரின் கிறிஸ்தவர்க்கு



எதிரான அடக்குமுறைகளுக்கு அஞ்சி, கயானெ (Gayane) என்பவரின் தலைமையில் ஒரு கன்னியர் குழு அர்மேனியாவுக்கு வந்தது. அரசர் Tiridates, இந்தக் குழு பற்றிக் கேள்விப்பட்டார். இவர்களில் மிகவும் அழகாக இருந்த றிப்சிமே (Rhipsime) என்பவர் தன்னை மணந்து கொள்ளுமாறு அரசர் வற்புறுத்தினார். அக்கன்னிப்பெண் மறுக்கவே, அந்தக் குழுவினர் எல்லாரையும் அரசர் சித்திரவதை செய்து கொன்றார். இந்த வன்முறைக்குப்பின், அரசர் ஒருவித அபூர்வ கடும் நோயால் தாக்கப்பட்டார். காட்டில் தான்தோன்றித்தனமாகச் சுற்றித் திரியும் கொடிய ஆண் பன்றி போன்று அரசரின் நடத்தை மாறியது.

அச்சமயத்தில் கொஸ்ரோவிடுக்ட்

### கிரகரியின் விடுதலையும் குணமடைந்த அரசரும்

(Khosrovidukht) என்பவர், பாதாள இருட்டறையில் எறியப்பட்ட கிரகரியால் மட்டுமே அரசருக்கு குணமளிக்க முடியும் என்று, ஒரு கனவு கண்டார். அச்சமயத்தில் கிரகரியை சிறையில் அடைத்து 13 ஆண்டுகள் ஆகியிருந்தன. அவர் உயிரோடு இருப்பாரா என்பதில் பலருக்கு சந்தேகம். ஆனால் கிரகரி மிகவும் உடல் மெலிந்து, உயிரோடு இருப்பதைப் பார்த்து எல்லாரும் வியந்தனர். 13 ஆண்டுகளாக, கனிந்த இதயமுடைய ஒரு கைம்பெண் ஒவ்வொரு நாளும் ரொட்டித்துண்டை இரகசியமாக அச்சிறையில் கிரகரிக்கு எறிந்து வந்தார் என்பதே, கிரகரி உயிரோடு இருப்பதற்கு காரணம். கிரகரி இருட்டறையிலிருந்து மீட்கப்பட்டார். அரசர் Tiridates, கிரகரியிடம் அழைத்துவரப்பட்டார். அவரும் அரசரை அற்புதமாய் குணமாக்கினார். இது கி.பி. 301ம் ஆண்டில் நடந்தது.

### அரசு மதமாக மாறிய கிறிஸ்தவம்

தான் குணமடைந்த சக்தியினால் உந்தப்பட்டவராய், உடனடியாக அரசர், கிறிஸ்தவத்தை அரசு மதமாக அர்மேனியாவில் அறிவித்தார். இவ்வாறு அர்மேனியா கிறிஸ்தவ நாடானது. அர்மேனிய அப்போஸ்தலிக்க திருஅவையின் தலைவராக, கிரகரியையும் அரசர் Tiridates நியமித்தார் .
பல கடவுள்கள் வழிபாடு ஆழமாக வேரூன்றியிருந்த அர்மேனியாவில், உடனடியாக எல்லாரும் கிறிஸ்தவத்தை ஏற்பது அவ்வளவு எளிதாக இல்லை. இதனால் அரசர் Tiridates, குடிமக்கள் அனைவரையும் கட்டாயப்படுத்தினார். அரசரின் படைகளுக்கும், பலகடவுள்கள் குழுவுக்கும் இடையே ஆயுதம் ஏந்திய பல சண்டைகளும் நடந்தன. அரசர் Tiridates, தனது பிற்கால வாழ்வை, பழங்கால நம்பிக்கைகளையும், எண்ணற்ற சிலைகளையும் கோவில்களையும், எழுத்துப் பிரதிகளையும் அழிப்பதில் செலவிட்டார். அரசர் மிகவும் உறுதியுடன் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்பி, கி.பி.330ம் ஆண்டில் இறந்தார். அரசர் Tiridatesஐ எதிர்த்த குடும்பங்கள், இவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து, விஷம் கொடுத்து இவரைக் கொன்றனர் என்று சொல்லப்படுகிறது. அர்மேனிய அப்போஸ்தலிக்க திருஅவை மற்றும் கீழை வழிபாட்டுமுறை ஆர்த்தடாக்ஸ் சபைகளில், அரசர் 3ம் Tiridates, அஷ்கேன் (Ashkhen), Khosrovidukht ஆகியோர் புனிதர்களாகப் போற்றப்படுகின்றனர்.

இவர்களின் திருவிழா, பெந்தக்கோஸ்து விழாவுக்குப்பின் ஐந்தாம் ஞாயிறையடுத்த சனிக்கிழமையில் சிறப்பிக்கப்படுகின்றது.

# திருத்தந்தையின் மறைக்கல்வி

## நாம் நம்பிக்கையின் மறைப்பணியாளர்கள்

நம்பிக்கையின் மறைப்பணியாளர்களாக மாறிடுவோம் என அழைப்பு விடுத்த திருத்தந்தை அவர்கள், கடவுளின் மீட்பின் ஆற்றலைக் குறித்து மகிழ்ச்சி கொள்வோம் என்றும், எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கி சோர்வுறாமல் வாழ்வோம் என்றும் 04.10.2017 அன்றைய மறைக்கல்வி உரையின் போது கூறினார்.

## நம்பிக்கையை மனங்களில் ஊட்டும் இறையருள்

மூன்று ஆணிகளுக்குள் முடக்கப்பட்டவராய் சிலுவையில் தொங்கிய கடைசி வேளையில், இறை இரக்கத்திற்காய் மன்றாடிய நல்ல கள்வனுக்காக விண்ணகத்தின் வாசலைத் திறந்து கொடுத்தார் இயேசு. இக்கள்வனானவன், தந்தையின் அன்பை உணர்ந்தவனாக திரும்பி வந்த காணாமல் போன மகனையும், கோவிலின் வாசலில் நின்றவாறு மனத்தாழ்ச்சியுடன் கடவுளின் கருணைக்காய் மன்றாடிய வரிதண்டுபவனையும் நினைவூட்டுகிறது. இந்நிகழ்வானது, நாமும் இரக்கத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டு, நம் வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியும், அவரின் வாக்குறுதியை நம்பியவர்களாக, இறைவனை நோக்கி திரும்பவேண்டும் என்பதை உணர்த்துகிறது. நாம் செய்த பாவங்களையும் குற்றங்களையும் பொறுத்து, விண்ணகம் வாழ்விற்கு இட்டுச் செல்லவே இறை இயேசு இம்மண்ணகம் வந்தார். தாம் மீட்டவருள் எவரும் அழிந்து போகக்கூடாது என்பதில் கவனம் கொண்டார். இயேசுவில் நம்பிக்கைக் கொண்டால் இறையருள் கிடைக்கும். குறிப்பாக சாவின் தருணத்தில் இவ் இறையருள் ஆறாய் பெருக்கெடுத்து நம் நெஞ்சை வந்தடையும். நல்ல கள்வனைப் போல, இயேசுவின் மீது நம்பிக்கைக் கொண்டவர்களாய், 'இயேசுவே என்னை நினைவில் கொள்ளும்' என செபிப்போம். இவ்வாறு திருத்தந்தை 25.10.2017 மறைக்கல்வி உரையின் போது கூறினார்.



## விழிப்புடன் காத்திருப்போம்

விளக்குகள் எரிந்துகொண்டிருக்க, தங்கள் இடையை வரிந்து கட்டிக்கொண்டு, தலைவர் வீடு திரும்பும்வரை கண்விழித்துக் காத்திருக்கும் பணியாளர்கள்போல், தம் சீடர்கள் இருக்கவேண்டும் என இயேசு கூறுவதை லூக்கா நற்செய்தி 12ம் பிரிவில் காண்கிறோம் (லூக். 12:35-36). வாழ்வில் சலிப்புகளும் வேதனைகளும் துன்பங்களும் வரும்போது, பொறுமையுடன் ஆண்டவரின் வருகைக்காக காத்திருக்க வேண்டும். காரணம் இருள் நீண்டு செல்வதில்லை. விடியல் என்பது விரைவிலேயே சாத்தியமாகும். எதிர்காலம் என்பது, நமது மதி நுட்பத்தால் வகுத்திடும் செயல்திட்டங்களால் மட்டும் யதார்த்தமாகி விடாது. கடவுளின் அன்பும் பராமரிப்பும் அவசியமாகிறது. கடவுளின் பராமரிக்கிறார் என்னும் உணர்வு உள்ளத்தை திடப்படுத்தும். 'ஆண்டவராகிய இயேசுவே வாரும்'(தி. வெளி.22:20), என முதல் சீடர்கள் உரைத்த அதே வார்த்தைகளை நாம் தினமும் உச்சரிப்போம். நம்முடைய மிகவும் துன்பகரமான வேளைகளில்,' இதோ நான் விரைவில் வருகிறேன்' (தி.வெளி.22:7) என இயேசு கூறும் ஆறுதல் மொழிகளுக்குசெவிமடுப்போம்.

இவ்வாறு, திருத்தந்தை 11.10.2017 அன்றைய மறைக்கல்வி உரையின் போது கூறினார்.

இவ்வாறு, திருத்தந்தை 11.10.2017 அன்றைய மறைக்கல்வி உரையின் போது திரத்தந்தை கூறினார்.



## சாவை எதிர்கொள்ளும் துணிச்சல்

இலாசரின் சாவானது இயேசுவின் கண்களின் கண்ணீர் வரவைத்தது. சாவு ஏற்படுத்திய துக்கத்தை தாங்கியவராய், தந்தையிடம் வேண்டுதல் செய்து இலாசரை கல்லறையிலிருந்து உயோருடு வெளியே வரவைக்கிறார். நலம் தந்து சாவிலிருந்து மீட்டு நிலைவாழ்வுக்கு இட்டுச் செல்லவே இயேசு வந்தார். அவர், 'நானே வாழ்வும் உயிர்ப்பும்' (யோவா.11:25) என்கிறார். அவரிடம் நாம் நம்பிக்கைக் கொண்டால் சாவினும் வாழ்வோம். இன்றைய தினம், நாம் இயேசு மீது நம்பிக்கைக் கொள்ள அழைக்கப்படுகிறோம். நாம் அழும்போது, கிறிஸ்து நமக்கு அருகில் மிக நெருக்கமாக உள்ளார் என்பதை நாம் அறிவோம். இதுவே நம் கிறிஸ்தவ நம்பிக்கை. நாமும் சாவை எதிர்கொள்ளும் அந்நாளில், 'நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு' (மாற்கு 5:41) எனும் இயேசுவின் குரலைக் கேட்டிட இயலும். இவ்வாரு திருத்தந்தை, 18.10.2017 மறைக்கல்வி உரையின் போது கூறினார்.

---



Pope Tweets

"தாயின் உதரத்திலும், அதன் குழந்தைப் பருவத்திலும், முதிர்ந்த வயதிலும், உடல் அல்லது மன வளர்ச்சிக்குறை உள்ள நிலையிலும், மனித வாழ்வைச் சிறப்பாகப் பாதுகாத்து பேணுவதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

அக். 14, 2017"

"உள்ளதை பகிர்ந்திட வேண்டுமாயின் மனமாற்றம் அவசியம். அச்செயல் சவால் மிக்கது.

அக். 16, 2017"

"புனித இரண்டாம் ஜான் பால் திருத்தந்தையின் நினைவைக் கொண்டாடும் இந்நாளில், "அஞ் சாதீர்கள், கிறிஸ்துவுக்காய் இதயத்தின் வாசல்களை திறந்து வையுங்கள்" என்னும் அவரது அறைகூவலுக்கு செவிமடுப்போம்.

அக். 22, 2017."

---

அருள் தூது
இது திருச்சபையின் குரல்

அருள் 1 | தூது 7 | அக்டோபர் 2017

**"இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்; நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளருகிறது"** (மாற் 4: 26-27).

**புரவலர்:** மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன்
(**தக்கலை மறைமாவட்ட ஆயர்**)

**பொறுப்பாசிரியர்:** அருட்தந்தை ஜோசப் சந்தோஷ்

**ஆலோசகர்கள்:**
Fr. சத்தியநேசன்
Fr. ராபின்ஸ் குழிகோடில்
S. கிறிஸ்துதாஸ், நித்திரவிளை
திரு. எட்வின்சன்
பெர்லின் அதன்கோடு

**வடிவமைப்பு:**
சீனாய் கிராபிக்ஸ்

**தொடர்புக்கு:**
Fr. ஜோசப் சந்தோஷ்
**தேவ மாதா ஆலயம்**
கிள்ளியூர் - 629 157
அலைபேசி - (0)9443086105

**அருள் தூது** இதழ் தனிப்பிரதி ₹ 5, ஆண்டு சந்தா ₹ 60



The golden touch to your marriage
Vaivahika
Exclusive wedding collections
Special packages for wedding purchase
Lowest making charge
Advance booking available
Exclusive large collection
sparkle
amor
George & Sons
kallarackals
JEWELLERS
SIGNATURE OF PURITY
Pammam: Main Road, Marthandam
Ph: 04651 272239 (2nd Showroom)
Main Road: Marthandam
Ph: 04651 270339 (1st Showroom)
Meenakshipuram: Nagercoil
Ph: 04652 225239